2. தகவல் கோரல்.

(அ) மதுரையிலுள்ள நீரேற்று நிலையங்களுக்கு மின்சாரம் வழங்கப்பெறாதது.

திரு. என். சங்கரய்யா: தலைவரவர்களே, கடந்த இரண்டு நாட்களாக இன்றைக்கு இரண்டாவது பெரிய கார்ப்பரேஷனாக இருக்கிற மதுரை மாநகரில் குடிதண்ணீர் கிடைக்காமல் மக்கள் அவதிப்படுகிறார்கள். நீரேற்று நிலையங்களுக்கு மின்சாரம் வழங்கப்படாததுதான் அதற்குக் காரணம் என்று சொல்கிறார்கள். ஏற்கனவே மாண்புமிகு அமைச்சரவர்கள் குடிநீரைப் பொறுத்தவரையில், நீரேற்று நிலையங்களுக்கு போதிய அளவுக்கு மின்சாரம் வழங்கப்படும் என்று சொன்னார்கள். ஆனால் மதுரையில் வழங்கப்படவில்லை. அது ஏன்? ஏற்கனவே உலகத்தமிழ் மாநாட்டுக்காகப் போடப்பட்ட குழாய்கள் எல்லாம் பழுதடைந்துவிட்டதாகச் சொல்லப்படுகிறது. இந்த இரண்டையும் நிவர்த்தி செய்து உடனடியாக அந்த மக்களுக்கு குடிதண்ணீர் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா? இதுபற்றி ஏற்கனவே ஒத்திவைப்பு தீர்மானமும் கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களுடைய உணர்வுகளை மதிக்கிறேன். ஆனால் இதற்கு எப்படி உடனடியாகப் பதில் சொல்ல முடியும்? (குறுக்கீடு) தண்ணீரை கம்பி வழியாகக் கொடுக்க முடியாது; குழாய் மூலமாகத்தான் கொடுக்க முடியும் (சிரிப்பு). பிரச்சனை முக்கியமானது என்பதால் நாளை அதற்கு பதில் அளிக்கச் சொல்கிறேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: சார், நாங்கள் கேட்பதற்கு அனுமதிக்க மாட்டேன் என்கிறீர்கள், ஆனால் திரு. சங்கரய்யாவுக்கு அனுமதி கொடுக்கிறீர்கள்; அதைப்போல எங்களுக்கும் அனுமதி கொடுக்க வேண்டும்.

திரு. ரா. உமாநாத்: அவர்களைத்தான் எக்கச்சக்கமாக அனுமதிக்கிறீர்கள். ஒன்றே ஒன்றுதான் இன்றைக்கு நாங்கள் கேட்பது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சங்கரய்யா திடீரென்று இப்படிக் கேட்கமாட்டார்கள். அவர் எதை சொல்கிறார் என்பதைக் கேட்பதற்காகத்தான் அனுமதித்தேன்.

1983 பிப்ரவரி 14]

திரு. என். சங்கரய்யா: முக்கியமான பிரச்சனை. அமைச்சர் ஏதாவது சொன்னால்தான் அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுப்பார்கள். நீரேற்று நிலையங்களுக்கு மின்சாரம் வழங்குவதை நிறுத்தக்கூடாது என்று அரசாங்கம் ஒரு கொள்கையாக முடிவு செய்திருக்கிறது. மதுரை விஷயத்தில் அது பொருந்தாதா என்று கேட்கிறேன்.

(முற்பகல் 10–30)

மாண்புமிகு திரு. சி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரைக்கும் அது பொருந்தும். அதற்கு மின் பற்றாக்குறை காரணமாக இருக்குமேயானால் அது உடனடியாகச் சரி செய்யப்படும்.

(ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன் அறிவிப்புகள்.

திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசாங்கத்தினுடைய முக்கியமான ஒரு கடமையில், தவறான ஒரு சூழ்நிலை ஏற்பட்டதன் காரணமாக தமிழ்நாட்டு மக்கள் வேதனைக்கு ஆளாகியிருக்கிறார்கள். தமிழ்நாடு அரசு பணித்தேர்வாணைக்குழுவினுடைய தேர்வு கேள்வித்தாள்கள் முன்னாலேயே வெளிவந்ததன் மூலமாக மிகப் பெரிய வருத்தத்தை ஏற்படுத்தியிருக்கிறது. ஏறத்தாழ 3 லட்சம் பேர்கள் தேர்வு எழுதியிருக்கிறார்கள். அந்த தேர்வின் முடிவு என்னவாகுமோ என்ற நிலைமைக்கு ஆளாகியிருக்கிறார்கள். அது அப்படி வெளியிடப்பட்டதற்கான ஆதாரம் இருக்கிறது. அதற்காக தரப்பட்டிருக்கிற ஒத்திவைப்புத் தீர்மானத்தை தாங்கள் உடனடியாக எடுத்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேராசிரியர் அவர்கள் கொடுத்தது போல் அதற்கான ஒத்திவைப்புத் தீர்மானத்தை எல்லாக் கட்சித் தலைவர்களும் கொடுத்திருக்கிறார்கள். (குறுக்கீடு) இன்றைக்கு ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுத்துக் கொள்ள வேண்டியதாக இருக்கிறது. அது மயிலாடும் துறையில் ஆதிதிராவிடர்களின் குடிசைகளுக்கு தீ வைப்பின் சம்பந்தமாக எழுந்துள்ள பதட்டநிலை குறித்து விவாதிக்கக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதையும் எல்லோரும் கொடுத்திருக்கிறார்கள். அரசு தரப்பிலேயிருந்து இதற்கு பதிலும் வந்திருக்கிறது. (குறுக்கீடு) எல்லாக் கட்சிக்காரர்களும் கொடுத்திருக்கிறார்கள் என்று சொல்லும்போது, திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்களும் கட்சியிலே தான் வருகிறார்கள்.